(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 21 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, செத்தெம்பர் 11, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0026/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலைக் கருத்திட்டத்திற்கான ஆரம்பத்தில் உள்ளவாறான செலவினையும் இன்றுள்ளவாறான செலவினையும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்திற்கு பணம் வழங்கும் நாடு அல்லது நிறுவனத்தின் பெயரினையும்,

(ii) கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தேய்மானம் அடங்கலாக ஓர் அலகிற்கான செலவினை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0041/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் இன்றுவரை மேதகு சனாதிபதி அவர்களினால் அல்லது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையையும்,

(ii) இவ் ஆணைக்குழுக்களின் நோக்கம் மற்றும் அவற்றின் தற்போதைய நிலையையும்,

(iii) இன்றுவரை இவ் ஆணைக்குழுக்களை கொண்டு நடாத்துவதற்கு ஏற்பட்ட செலவை ஆணைக்குழு வாரியாகவும்,

(iv) இவ் ஆணைக்குழுக்களுக்கு தலைமை வகிக்கின்ற நபர்களது பெயர்களையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைகள் தொடர்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

(இ) இன்றேல், ஏன்?

0045 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தையும்,

(ii) லீற்றர் ஒன்றுக்கான மொத்த விற்பனைச் செலவு எவற்றை உள்ளடக்கி யுள்ளது என்பதையும்,

(iii) சேரும் இலாப எல்லையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அந்தக் காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட பெற்றோல், டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள் லீற்றர்களின் அளவையும்,

(ii) அவற்றின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அளவையும் இறக்குமதி செய்யப்பட்ட அளவையும் அவற்றுக்கான செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றுடனும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0153/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் (2008 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) மூலம் அனைத்து மாகாணங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் திட்ட த்திற்காக 2,625 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0154/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம், வீடமைப்பு அபிவிருத்திக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் 450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டி ருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0155 / ’08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் (2008 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம் சுனாமி உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 118 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0352 / ’ 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி, அருப்பலவத்த வீதி, 23 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. கே. பி. பீ. முதன்னாயக்க 1991.11.14 ஆம் திகதி முதல் இலங்கை மத்திய வங்கி தலைமையகத்தில் உணவகப் பரிசோதகராக சேவையில் சேர்ந்து 1993.05.01 ஆம் திகதி முதல் தொழிலில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மத்திய வங்கியை நவீனமயமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் இவர் சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்காக 2001.11.15 ஆம் திகதி இராஜினாமா விண்ணப்பத்தை ஒப்படைத்ததோடு, அதிலிருந்து 4 நாட்களின் பின்னர் அதாவது 2001.11.19 ஆம் திகதி மீண்டும் விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுக் கொண்டதற்கான கடிதத்தை நிறுவனத் தலைவருக்கு ஒப்படைத்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) திரு. முதன்னாயக்க சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்காகச் சமர்ப்பித்த விண்ணப்பத்தை மீண்டும் வாபஸ் பெறுவதற்காக விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததன் காரணம் யாது,

(ii) இளைப்பாறுவதற்குத் தேவையான 10 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள போதும் இவருடைய ஓய்வூதியத்தைக் கூட இல்லாதொழித்திருப்பதன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இவருடைய சேவைக்காலத்தை நீடிக்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0354 / ’ 08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003 ஆம் ஆண்டிலிருந்து புத்தசாசன அமைச்சின் (தற்போதைய மத அலுவல்கள் அமைச்சு) கீழ் அமுலாக்கப்பட்ட புண்ணிய கிராம கருத்திட்டத்தின் மதியுரையாளராகச் செயலாற்றிய வண. பலப்பிட்டியே சிறி சீவலி தேரர் மேற்படி பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம் யாது,

(ii) நான்கு வருடங்களாக வார இறுதியிலும் கஷ்டப்பிரதேசக் கிராமங்களில் 300 நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ள சீவலி தேரரை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்,

(iii) அது யாருடைய விதப்புரையின் பேரில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்விதம் நியமிக்கப்பட்டுள்ளவரின் கல்வி மற்றும் மதத் தகைமைகள் யாவை,

(ii) வண. பலப்பிட்டியே சிறி சீவலி தேரரை மீண்டும் மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0355/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுக்க, போப்பே உடகம, இல. 52 முகவரியில் வதியும் திரு. எஸ். பி. ஆரியரத்ன என்பவரால் உரிமமின்றி அனுபவித்து வருகின்ற காணியில் 2 பலாமரங்களும் காட்டு ஈரப்பலா மரமொன்றும் எவரேனுமொருவரால் கள்ளத்தனமாக தறித்து எடுத்துச்செல்லப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக 2007.01.06 ஆம் திகதி பாதுக்க பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவரது இந்த முறைப்பாடு விசாரிக்கப்பட்டு சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அனுமதிபெறாமல் இவ்வெட்டு மரங்களைத் தறித்து எடுத்துச் சென்றவர்கள் யாவரென்பதை வெளிக்கொணர நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0472/ '08

10.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந் தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமையாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்குகளின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0473/ '08

11.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007, திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்பாபசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2007 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0474/ '08

12.

கௌரவ விஜித ரணவீர,— கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 'கடவர' என அழைக்கப்படுகின்ற புல்வெளிக்கான உரிமை யாருக்குள்ளது என்பதையும்,

(ii) இதனைப் பதிவு செய்த அரச நிறுவனத்திற்கு பால் உற்பத்தியாளர்களால் 2005, சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2007, திசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டுள்ள வரித்தொகையின் அளவு வருட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இப்புல்வெளியின் பொறுப்பு கால்நடை வளர்ப்பு விவசாய அமைப் பொன்றுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) கையளித்தவர் மற்றும் கையளிக்கப்பட்டோர் யாவர் என்பதையும்,

(vi) இந்த அமைப்பின் பெயர், அதில் பிரதான பதவிகளை வகிப்போரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(vii) அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த அமைப்பிற்கு புல்வெளி கையளிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்புல்வெளியின் அபிவிருத்திக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள அரச மற்றும் அரச சாரா பணத்தொகை குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கை களின்படி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) புல்வெளியினைச் சுற்றி மின்வேலியை நிர்மாணித்தல், முற்புதரை அகற்றி புல் வளர்த்தல் மற்றும் தற்போது பயன்படுத்தப்படாத வாவிகளை மறு சீரமைத்தல் என்பவற்றுக்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அது எக்கால வரையறைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 'கடவர' புல்வெளி தொடர்பான முழுமையான பின்னணியைக் கொண்ட ஓர் அறிக்கையினை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0728/ '08

13.

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச் சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகின்ற அரச சார்பற்ற அமைப்புக்கள் யாவை,

(ii) அவற்றின் முகவரிகள் யாவை,

(iii) அவ்வமைப்புக்கள் தற்போது இயங்கிவருகின்ற துறைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 ஆண்டுகளில் மேற்படி ஒவ்வோர் அரச சார்பற்ற அமைப்பினாலும் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு

எனும் விபரங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி, அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக அரச நடவடிக்கை முறையேதும் உள்ளதாவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0729/ '08

14.

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவை,

(ii) மேற்படி, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் சொந்தமான அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் யாவை,

(iii) மேற்படி, நிறுவனங்கள் மூலமாகப் பேணிவரப்படுகின்ற கிளைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iv) அந்நிறுவனங்களில் நிலவுகின்ற கடன்சுமை அளவு தனித்தனியாக எவ்வளவு,

(v) மேற்படி, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சமுர்த்தி இயக்கத்திலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைப்பணத் தொகை எவ்வளவு,

(vi) இந்நிறுவனங்களைக் கட்டியெழுப்ப கூட்டுறவுத்துறை அமைச்சினால் வேலைத்திட்ட மொன்று வகுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0730/ '08

15.

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை யாது,

(ii) ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள நெல், மரக்கறி, மலர்கள், பழங்கள் மற்றும் ஏனையவற்றைப் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 'உரமானியம்' எந்தெந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது,

(ii) இதன்பொருட்டு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பசளையின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மரக்கறிச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா,

(ii) மரக்கறிச் செய்கையாளர்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வழிமுறைகள் இருக்கின்றனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— தேசிய பொதுவழிகள்,— இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுவீதி வலைப்பின்னல் ஒன்றின் திட்டமிடுகை, வடிவமைப்பு, நிருமாணம், அபிவிருத்தி, பேணுகை அத்துடன் நிருவாகம் என்பவற்றுக்காக ஏற்பாடு செய்வதற்காகவும்; வீதி நிருமாணத்தில், அபிவிருத்தியில் மற்றும் பேணுதலில் தனியார்துறை முதலீடு மற்றும் பங்களிப்பு என்பவற்றுக்கு வசதியளிப்பதற்கு அவசியமான சட்டவரைவுருவொன்றை ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன்; வீதிகளின் அபிவிருத்தி மற்றும் பேணுகையில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகாரசபைகளுக்கு உதவுவதற்கும்; வீதிகள் மற்றும் பொதுவீதிகளின் நிருமாணம், பேணுகை அத்துடன் முகாமையில் ஈடுபடுகின்ற சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களை மேம்படுத்துவதற்கும், வசதியளிப்பதற்கும்; அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*2.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் 07 ஆந் திகதிய 1544/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூராயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*6.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

*7.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு

*8.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால்

ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து

செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்*,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும்

உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | |
|---|---|---|
| **தவிசாளர் (முழு நேர)** | | |
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |
| **உறுப்பினர்கள்** | | |
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சோமா எதிரிசிங்க சுவர்ணாதார நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.